

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.10.2024) நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை 2024ன் ஜூடோ கல்லூரி மாணவியர் 52(KG) எடை பிரிவு போட்டியை தொடங்கிவைத்து, பார்வையிட்டு, வெற்றிபெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.10.2024) நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை–2024 போட்டிகளில் பங்கேற்கும் வீரர் வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகள் குறித்து கேட்டறிந்து அவர்களுடன் உணவு அருந்தினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்கு

# ரூ. 83.37 கோடியும் - பரிசுத் தொகை ரூ. 37 கோடியும் முதல்வர் ஒதுக்கீடு!

## இந்த ஆண்டு 12 லட்சம் வீரர்கள் போட்டிக்கு விண்ணப்பித்து விளையாடுகின்றனர்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

**சென்னை,அக்.16 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நேரு உள் விளையாட்டரங்கம் ஒலிம்பிக் அகடமியில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை - 2024 மாநில அளவிலான ஜூடோ விளையாட்டு போட்டிகளை ஆர்வத்துடன் ரசித்து பார்வையிட்டு, போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி, விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.**

**பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய துணை முதலமைச்சர் - விளையாட்டுப் போட்டிக்கு முதல்வர் அதிக நிதி ஒதுக்கியுள்ளார் எனவும், இந்த ஆண்டு 12 லட்சம் வீரர்கள் விண்ணப்பித்து விளையாடி வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.**

2024 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் விளையாட்டு போட்டிகளின் இறுதிக் கட்ட போட்டிகள் சென்னை, செங்கல்பட்டு, மதுரை, கோவை, திருச்சி ஆகிய இடங்களிலும் மேலும் 19 வெவ்வேறு இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. நேற்று முன்தினம் (14.10.2024) சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் ஒலிம்பிக் அகடமியில் நடைபெற்ற ஜூடோ விளையாட்டு போட்டிகளை துணை முதலமைச்சர் அவர்கள் ஆர்வத்துடன் ரசித்து பார்வையிட்டார். ஜூடோ விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

விளையாட்டு வீரர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதிய உணவினை விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்களுடன் துணை முதலமைச்சர் அவர்கள் சேர்ந்து அமர்ந்து உணவருந்தினார்.

இந்த நிகழ்வின்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டினுடைய விளையாட்டுத்துறை திறமையாளர்களை அடையாளம் காண்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி வருகின்றோம். இந்த ஆண்டுக்கான மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் சென்னை உள்ளிட்ட நகரங்களில் நடைபெற்று வருகின்றன. இந்த போட்டிக்கான ஏற்பாடுகளை இன்றைய தினம் நான் இங்கு நேரில் வந்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறேன்.

**சென்ற ஆண்டை விட பரிசுத் தொகை உயர்வு!**

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை நடத்த இந்த (2024) ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 83 கோடியே 37 லட்சத்தை ஒதுக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். சென்ற ஆண்டை விட நிதியை அதிகப்படுத்தி உத்தரவிட்டுள்ளார்கள். இந்த ஆண்டிற்கு பரிசுத்தொகையாக மட்டுமே ரூ.37 கோடியாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி வழங்கியுள்ளார்கள். அதுமட்டுமில்லாமல் சென்ற வருடம் இந்த முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் பங்கேற்க தமிழ்நாடு முழுவதும் இருந்து 5 லட்சம் விளையாட்டு வீரர்கள் விண்ணப்பித்து பங்கு பெற்றிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் இருந்து மொத்தம் 12 லட்சம் வீரர்கள் இந்த போட்டிகளுக்கு விண்ணப்பித்து, பங்கேற்று விளையாடி வருகிறார்கள். பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், அரசு பணியாளர்கள், பொதுமக்கள் என 5 பிரிவுகளில் 36 வகையான விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 15 நாட்கள் நடத்தப்பட்ட மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போட்டி நடுவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இதர உதவி பணியாளர்கள் (supporting staffs) இந்த போட்டிகள் சிறப்பாக நடைபெற பணியாற்றி வருகிறார்கள். மாநில அளவிலான போட்டிகள் கடந்த 4 ம் தேதி தொடங்கியது. இதில் 32,700 வீரர்கள் பங்கேற்று விளையாடி வருகிறார்கள்.

**19 இடங்களில் 21 நாட்கள் நடைபெறும் போட்டிகள்!**

சென்னை, செங்கல்பட்டு, மதுரை, கோவை, திருச்சி ஆகிய இடங்களிலும் அதைத் தவிர்த்து 19 வெவ்வேறு இடங்களிலும் 21 நாட்களுக்கு இந்த இறுதிப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள் மற்றும் உதவி பணியாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் இருந்து போட்டிகள் நடைபெறும் நகரங்களுக்கு சென்று வர போக்குவரத்து வசதிகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. அதே போல விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு, 150 க்கும் மேற்பட்ட ஓட்டல்களில் தங்கும் வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு (supporting staffs) தரமான உணவு வழங்கப்பட்டு வருகின்றது. தினமும் மூன்று வேளை உணவு வழங்கப்படுவதுடன், காலை மற்றும் மாலை இடைவேளைகளில் சிற்றுண்டியும் வழங்கப்படுகின்றது. முதலமைச்சர் அவர்கள் மாநில அளவிலான இறுதிபோட்டிகளில் வெற்றி பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு வருகின்ற 24 ந்தேதி பரிசு, கேடயங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்க உள்ளார்கள்.

**விளையாட்டுத்துறை தலைநகர் தமிழ்நாடு!**

இப்போட்டிகளில் பங்கேற்கும் இளம் திறமையாளர்களை கண்டறிந்து, அவர்களுக்கு பயிற்சி அளிப்பதே முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளின் முக்கிய நோக்கமாகும்.

இந்திய துணைக்கண்டத்தின் விளையாட்டுத்துறை தலைநகராக தமிழ்நாட்டை உருவாக்க அனைவரும் அயராது உழைப்போம். வந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேட்டி!**

**கேள்வி:** மழையினால் போட்டிகள் தடைபடாமல் இருக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து..

**துணை முதல்வர்:** மழையினால் விளையாட்டுப் போட்டிகள் தடைபடாமல் நடைபெற தேவையான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்படி மழையினால் பாதிக்கப்பட்டால் போட்டிகளை ஓரிரு நாட்கள் கூடுதலாக சிறப்பாக நடத்தி முடிப்போம்.

**பருவமழையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள்!**

**கேள்வி:** மழை அறிவித்து உள்ளார்கள். முன்னேற்பாடு பணிகள் எந்த அளவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**துணை முதல்வர்:** கடந்த 3 மாதங்களாகவே தொடர்ந்து 5 ஆய்வு கூட்டங்கள் நடத்தியிருக்கிறோம். நம்முடைய நீர்வளத்துறை அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், அனைத்து மூத்த அமைச்சர்கள், சென்னையில் இருக்கக்கூடிய அமைச்சர்கள், சென்னையில் இருக்கக்கூடிய அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்களைக் கொண்டு தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்களை நடத்தியுள்ளோம்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டுள்ளன. சீரமைப்பு பணிகளுக்காக சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் அதிகாரிகள் மூலமாக உடனே நிறைவேற்றி இருக்கிறோம். ஒரு வாரத்திற்கு முன்பு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தியுள்ளோம். இன்று மீண்டும் கடந்த 2 மணி நேரத்திற்கு முன்பாக, முதலமைச்சர் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலாளர், மூத்த அலுவலர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்த முறை மழையை தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டு மக்களும் வெற்றிகரமாக எதிர்கொள்வோம் என்ற நம்பிக்கை உள்ளது.

**விளையாட்டு வீரர்களுக்கு தேவையான வசதிகள்!**

**கேள்வி:** மழை வந்தால் போட்டிகள் நடத்த செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து

**துணை முதல்வர் :** விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கடந்த 10 நாட்களாக தங்கி விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று வருகின்றார்கள். மழை வந்தாலும், விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தேவையான தங்கும் வசதிகள், போக்குவரத்து வசதிகள், உணவு வசதிகள் அனைத்தும் தரமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்படி மழை வந்தாலும் இரண்டு, மூன்று நாட்கள் கூடுதலாக தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள், விளையாட்டு பயிற்றுநர்கள், வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

---




வேலூர் மாவட்டம், சேர்க்காட்டில் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் 19 ஆவது பட்டமளிப்பு விழாவானது, பல்கலைக்கழக வேந்தரும், தமிழ்நாடு ஆளுநருமான ஆர்.என்.ரவி தலைமையில் நடைபெற்றது. இதில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், பல்கலைக்கழக துணை வேந்தர் ஆறுமுகம், பதிவாளர் செந்தில் வேல்முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் 13 துறைகளைச் சார்ந்தவர்களுக்கு முதல் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

### தமிழ்நாடு ஆளுநர் தலைமையில்

# வேலூரில் - திருவள்ளுவர் பல்கலைக்கழக 19ஆவது பட்டமளிப்பு விழா!

## உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் பங்கேற்பு!

*வேலூர், அக்.16 -*

*வேலூர் மாவட்டம், சேர்க்காட்டில் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் 19 ஆவது பட்டமளிப்பு விழாவானது, பல்கலைக்கழக வேந்தரும், தமிழக ஆளுநருமான ஆர்.என்.ரவி தலைமையில் நடைபெற்றது.*

*இதில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், பல்கலைக்கழக துணை வேந்தர் ஆறுமுகம், பதிவாளர் செந்தில் வேல்முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் 13 துறைகளைச் சார்ந்தவர்களுக்கு முதல் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இதில் பட்டங்களை 155 மாணவ, மாணவிகளுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி வழங்கினார். பின்னர் மாணவர்களுக்கு ஆளுநர் உறுதி மொழியையும் செய்து வைத்தார்.*

*இதில் இந்திய தோட்டகலை ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் துசார் காந்தி பெஹெரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா பேருரையாற்றினார். அதில் அவர் பேசுகையில், 47% இந்தியர்கள் இளைஞர்கள் நாம் நமது நாட்டை கட்டமைக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். நாசா நிறுவனம் கூறிய, காலநிலை மாற்றத்தால் போல் பூமியின் வெப்பம் உயர்ந்துள்ளது. இது 2100ஆம் ஆண்டு மேலும் அதிகரிக்கும். இதனால் பல இன்னல்களை சந்திக்க நாம் தாயாராக இருக்க வேண்டும். மக்கள் தொகை பெருக்கம், இடப்பற்றாக்குறை, மேலும் நிலத்தடி நீர் குறைந்து போவதும் அதிகரித்துள்ளது.*

*கடந்த ஆண்டை பார்க்கும்போது மேலும் இந்த ஆண்டு நிலத்தடி நீர் குறைந்துள்ளது. இதுபோன்ற சவால்கள் உள்ளது. மேலும் மைக்ரோ பிளாஸ்டிக் அதிகரிப்பால் அது பலகேடுகளை மனித குளத்திற்கு ஏற்படுத்துகிறது. மனித உடலிலும் கலக்கிறது. மேலும் பசுமை அமில வாயுக்கள் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றபடுவதாலும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. இவைகள் மூலமாக அதிகம் பாதிப்பு ஏற்படுகிறது. மனிதர்கள் சுற்றுச்சூழல் மாசுபாடுகளை தடுக்க நமது அறிவியல் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. செயற்கை நுண்ணறிவு தற்போது வளர்ந்து வரும் டிஜிட்டல் தொழில் நுட்பமாகும். மேலும் எதிர்காலம் என்பது பயோசிந்தடிக், ஆர்டிபிஷியல் இண்டலிஜெண்ட், ரோபோடிக்ஸ்நானோ தொழில்நுட்பங்கள் இவைகளை சார்ந்தே இருக்கும். இளைஞர்களாகிய நீங்கள் அறிவியல் ஆற்றலை பயன்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சி, மேலும் தேசிய அளவியல் இளைஞர் திறன் மேம்பாடுகளை வளர்க்கவும் அரசுகள் பயிற்சி அளிக்கிறது.*

*இதனை இளைஞர்கள் பயன்படுத்தி நாட்டை மேலும் உயர்த்த வேண்டுமென கேட்டுக் கொண்டார்.*